# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | I.A.No. 10/2024 in O.S.No. 70/2019 | **CNR No.** | : | TNKI13-000120-2019 |
| **Name** | : | சுப்பிரமணி | **Father's Name** | : | முனியப்ப கவுண்டர் |
| **Witness for** | : | Respondent | **Calling** | : | RW1 |
| **Age** | : | 63 | **Village** | : | ஆண்டிப்பட்டி |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11:15 AM | **End Time** | : | 11:49 AM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 04.11.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) நான் **அசல் வழக்கு எண்.70/2019** என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் மாணிக்கம், ஊத்தங்கரை வட்டாட்சியர், மற்றும் கிருஷ்ணகிரி ஆட்சியருக்கு எதிராக தாக்கல் செய்தேன். இந்த **இடை மனு எண். 10/2024** மனுவை மாணிக்கத்தின் மகள்கள் சாந்தி மற்றும் சந்திரமதி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், சாந்தி என்பவர் மாணிக்கத்தின் 2வது மனைவியின் மகள் ஆவார், சந்திரமதி அவரது இரண்டாவது மனைவி ஆவார். மாணிக்கத்தின் அப்பா பெயர் தெரியுமா என்றால் காவடி என்ற பெருமாள் ஆவார். காவடி என்ற பெருமாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று வாரிசுகள் ஆவார்கள். அவர்கள் பெயர் ஞாபகம் இல்லை. மாணிக்கத்தின் அண்ணா பெயர் தெரியுமா என்றால் பெயர் ஞாபகம் இல்லை, அவருக்கு எத்தனை மனைவிகள்

என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இரண்டாவது மகன் மாணிக்கமா என்றால் ஆமாம், மூன்றவாது மகன் பெயர் தெரியுமா என்றால் ஆறுமுகன் ஆவார். ஆறுமுகத்திற்கு எத்தனை குழந்தைகள் என்றால் 1 மகன் வெங்கடேசன் ஆவார். அவது மனைவி பெயர் என்னவென்றால் அவர் பெயரும் மாணிக்கம் ஆகும்.

(2) மாணிக்கம் வழக்கு நிலுவையில் இருந்த போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு வேலு மற்றும் திருமால் ஆகியோர்களை நான் வழக்கில் வாரிசுகள் என்று சேர்த்தேனா என்றால் இல்லை. திருமால் மற்றும் வேலு ஆகியோர்கள் சாந்தி என்பவருக்கு மூத்தவர்களா என்றால் இல்லை, சாந்தி 2வது மனைவிக்கு பிறந்த பிறகு தான் அவர்கள் பிறந்தார்கள். மாணிக்கத்திற்கு 2 மனைவிகள் என்றால் சரிதான், முதல் மனைவி பெயர் என்னவென்றால் பச்சயம்மாள் மற்றும் 2வது மனைவி பெயர் சந்திரமதி ஆகும். பச்சயம்மாளும் சந்திரமதியும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். மாணிக்கம் என்பவருக்கு 1வது மனைவி மூலம் வேலு, திருமால் என்பவர்களும் 2வது மனைவி மூலம் சாந்தி என்பவரும் வாரிசுகள் என்றால் சரிதான்.

(3) சாந்தி என்பவர் தன்னையும் தனது தாயாரையும் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் எனக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்றால் இருக்கிறது, 2வது மனைவிக்கு எந்த உரிமையும் கிடையாது அதனால் இந்த மனு நிலைக்கதக்கதல்ல. 2ம் மனைவி சாந்திக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளதா என்றால் மாணிக்கத்தின் வாரிசு என்ற உரிமையில் வழக்கை நடத்த உரிமை உள்ளது.

(4) சாந்தி எங்கு உள்ளார் என்றால் கல்லூரில் சுமார் 5–6 ஆண்டுகளாக இருக்கிறார். சாந்தியை எங்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் எட்டிபட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். சாந்தி என்பவருக்கு குழந்தை பிறந்த பிறகு கணவர் இறந்து விட்டதால் தனது அம்மாவுடன் இருந்து வருகிறார் என்றால் சரிதான். **அசல் வழக்கு எண்.112/2013** யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சாந்தி என்பவர் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

(5) மேற்படி **அசல் வழக்கு எண்.112/2013** ஐ தான், வேலு, திருமால் ஆகியோர்கள் மாணிக்கத்தின் வாரிசுகள் என்றும் அவரது சொத்துக்கள் உரிமை உள்ளது என்று தான் வழக்கு தாக்கல் செய்தோம். வழக்கு சொத்தை மேற்படி வழக்கை சாந்தி தாக்கல் செய்த பிறகு தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான், 8 வது மாதம் வாங்கினேன். வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் 3 வது மாதம் என்று நினைக்கிறேன். மேற்படி வழக்கில் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது மனைவிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார், தற்போது அவருக்கு உடல் நிலை சரியில்லாததால் நான் நடத்தி வருகிறேன்.

(6) **அசல் வழக்கு எண்.112/2013** ல் எதிர்வழக்குரை **02.01.2014** ம் தேதி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த எதிர்வழக்குரையில் சாந்தி என்பவர் மாணிக்கம் என்பவருடைய இரண்டாவது மனைவி உடைய மகள் என்று தான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையில் **சர்வே எ ண். 18/3** ல் கிரையம் பெற்று அனுபவித்து வருவதாக தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சாந்தி இந்த வழக்கு

சொத்து **சர்வே எண். 18/3** மூலம் பங்குரிமை உள்ளதாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. **சர்வே எண்.18/3** சொத்தில் பங்குரிமை உள்ளது என்று தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சாந்திக்கு எந்த உரிமையும் இல்லை என்று மறுத்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கிரையம் பெற்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(7) **சர்வே எண்.18/3** ல் மாணிக்கம் கிரையம் வாங்கினாரா என்றால் **1988 ல் 20 சென்ட்** கிரையம் வாங்கியுள்ளார். அதன் செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கும் பொழுது யார் யார் பெயரில் இருந்தது என்றால் மாணிக்கம், ருக்குமணி, ஜீவானந்தன் மற்றும் கங்காதரன் ஆகியோர்கள் பெயர்களில் இருந்தது. மேற்படி 20 சென்டு நிலத்திற்கு தனி பட்டா ஏற்பட்டதா என்றால் இல்லை.

(8) நான் 2 வது மனைவிக்கு உரிமை இல்லை என்றும் ஆனால் அவரது மகளுக்கு நடத்த உரிமை உள்ளது என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் தவறான நடத்தையின் காரணமாக பிறந்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யாருக்கு பிறந்தார் என்று அதை நான் சொல்ல இயலாது. சாந்தி என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவருக்கு எதிராக அவதூராக மேற்படி சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எதிராக அவதூராக சொல்ல எனக்கு உரிமை இல்லை என்றால் நடந்ததை சொல்லியுள்ளேன். சுமார் எத்தனை வருடங்களுக்கு முன்பு சந்திரமதி

மாணிக்கம் உடன் இருந்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுவில் வாரிசாக சேர்க்க வேண்டும் என்பவதற்காக தான் தாக்கல் செய்துள்ளார் என்றும் அதனால் மனு அனுமதிக்கடப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai